DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of Judicial Magistrate Court, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 431/2020** |
| Deposition of Witness for | : PW2 |
| Name | : ராஜராம் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 10.07.2026. |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 10 July 2026.

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது கரிவலம்வந்தநல்லூரில் வசித்து வருகிறேன். நான் கீரை வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரி எனக்கு தெரியும். சுமார் 6 ஆண்டுக்கு முன்பாக ஒருநாள் தமிழுக்கு 14ம் தேதி மாதந்தோறும் கரிவலம்வந்தநல்லூரில் சமுதாய நலக்கூடத்தில் வரவுசெலவு கணக்கு பார்ப்பதற்கு கூட்டம் நடக்கும். அப்போது நலக்கூடற்கு முன்பாக உள்ள ரோட்டில் அ.ச.1 நின்றுகொண்டிருந்தபோது, அங்கு வந்த ஆஜர் எதிரி அவரை பார்த்து வாய் பேசி அவரை கையொல் அடித்து நீ இனிமேல் கூட்டத்திற்கு வரக்கூடாது நாங்கள்வைப்பது தான் சட்டம் என்று கூறினார். இது சமபவந்தமாக

அ.சா.1 புகார் கொடுத்த விபரம் எனக்கு தெரியும். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

எங்கள் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட பொதுவான கிணறு உள்ளது என்றால் சரிதான். அந்த பொது கிணற்றில் 10-15 நபர்கள் கீரை பயிர் செய்து விவசாயம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி பொது கிணற்றில் தான் சமுதாய பெண்கள் துணி துவைப்பார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்றதிற்கு ஒருவாரம் முன்பிருந்தே கிணற்றில் மோட்டார் வேலைசெய்யாமல் தண்ணீர் வரவில்லை என்றால் சரிதான். அதனால் எங்கள் சமுதாய பெண்கள் துணிதுவைக்க போகாமல் இருந்தார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடக்கும்போது நான் நாட்டாமையுடன் கூட்ட அறங்கின் உள் இருந்தேன் என்றால் சரிதான். வெளியில் என்ன பிரச்சனை நடந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவம் நடைபெறும்போது அ.சா.1-ன் சித்தப்பா ராமர் என்பவர் நாட்டாமையாக இருந்தார் என்றால் சரிதான். அதற்கு முன்பு எதிரியின் சம்மந்தி கருப்பசாமி நாட்டாமையாக இருந்தார் என்றால் சரிதான். தற்போது செல்லத்துரை, சித்திரைகனி என்பவர் சமுதயா நாட்டாமையாக இருக்கிறார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்த உடன் போலிசார் சம்பவயிடத்திற்கு வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். ஆஜர் எதிரி பெண்கள் துணி துவைக்கமுடியவில்லை அதனால் மோட்டாரை சரிசெய்யவேண்டும் என்று நாட்டாமையிடம் கேட்டாரா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. நான் முதல்விசாரணையில் சொல்லிய விபரங்களைத்தான் போலிசாய் விசாரணையில் சொல்லியுள்ளேன்

என்றால் சரிதான். நான் அ.சா.1 கேட்டுக்கொண்டதற்கினங்கதான் முதல் விசாரணையில் பொய் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

(Sd/-)M.Mari
Judicial Magistrate,
Sankarankovil.